**இலங்கை புடவைகள் மற்றும் ஆபரணங்கள் நிறுவனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை புடவைகள் மற்றும் ஆபரணங்கள் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் ாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக திட்டத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5,1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள்

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நியர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல், நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தலும் சொத்துக்களுக்காக கணக்கு நடவடிக்கைகளைப் பேணுதலும், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதியப்பட்ட சொத்துக்களுக்காக கணக்கீட்டினைப் பேணுகின்ற சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவனத்தினால் பேணுதல், அத்தியவசியமனதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 76 ஆம் பந்தியிலுள்ள தேவைப்பாடுகளை நிறைவேற்றாத சொத்துக்கள் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 71,145,429 பெறுமதியுடனான மூலதனத் தன்மையான நடைமுறை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்ட உரிய சரி செய்தல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகள் முற்பணங்களாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 8 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கேள்வி வைப்புக்கின் அடிப்படையில் மற்றும் நிதியத்தின் முகாமைத்துவ கணக்கிற்கு பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி ரூபா 37,415,413 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 43,648,601 ஆக ரூபா 6,233,188 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | வருடாந்த வட்டி வருமானத்தை மீண்டும் பரீட்சித்துப் பார்த்து கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட திருத்தங்களை சரி செய்து கொள்வதற்கு குறித்துக் கொள்கிறேன். | காசுப் பாச்சலின் கீழ் பணமாகச் செய்யப்பட்ட கொடுபனவுகளும் பெறுவனவுகளும் மாத்திரம் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | **இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இல்** | | |
| (i) | 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயத்தை மீள்மதிப்புச் செய்யும் போது அச்சொத்தினைச் சார்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுப்பு முழுமையாக மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் 10 வாகனங்களில் 7 வாகனங்கள் மாத்திரம் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருந்தது. | திருத்தம் செய்வதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதனால் மீள்மதிப்புச் செய்வதற்கு முடியவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 221,618,704 கிரயமான ஆதனம், பொறி மற்றும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் 92 (ஆ) பந்தியின் பிரகாரம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உபகரணங்கள் தற்பொழுது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தும் அதுதொபர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் வினைத்திறனான ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| | (iii) | 73 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் ரூபா 3,787,086 செலவு செய்து அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி காணியின் கிரயத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் பெறுமானத் தேய்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு அடுத்துவரும் கணக்காண்டு வரை அமுல்ப்படுத்தப்பட்ட பயிற்சி கற்கை நெறிகளுக்காக அறவிடப்பட்ட கட்டணம் தொடர்பாக உரிய ஆண்டிற்கு தனித்தனியாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் கற்கை நெறிக்காக அறவிடப்பட்ட ரூபா 3,268,170 முழு வருமானமும் | | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கும் வகையில் சரிசெய்வதற்கு நடவக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்கான வருமானமாக இனங்காணப்பட்டதன் காரணமாக ரூபா 3,032,170 தொகையால் வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 44 இலிருந்து 49 வரையான பந்திகளுக்கு இணங்க பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானத்தை இனங்காணல் மற்றும் அளவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நிறுவனத்திற்கு கிடைத்திருந்த ரூபா 40 மில்லியன் மூலதன மானியம் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் சரிசெய்யப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமமம் பின்பற்றப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய பணம்

| **உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பயிற்சி கற்கை நெறிகளை நடாத்தியதன் மூலம் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 10,601,534 ஆகும். இதில் ரூபா 2,643,995 தொகை 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட காலமாகவும் ரூபா 3,007,812 தொகை 3 ஆண்டுகளை மிகைத்தும் காணப்பட்ட கடன் மீதியும் ஆகும். அக்கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடந்த 3 ஆண்டுகளில் கடன் மீதியானது படிப்படியாக அதிகரித்திருந்தது. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பயிற்றுவித்தல்களிலிருந்து கிடைக்க வேண்டிய மீதிக்கும் தனித்தனி மீதிப் பட்டியலுக்குமிடையே ரூபா 642,210 இணக்கமின்மை காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | கிடைக்க வேண்டிய பயிற்சி கற்கைநெறி கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க மற்றும் 2022 திசெம்பர் 20 ஆந் திகதிய 01/2020 (ii) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேவை வழங்கலுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை அதிகாரிக்காத அனைத்து அரசாங்க நிறுவனங்களும் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டணங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் நிறுவனத்தின் 39 கற்கைநெறிகளின் கட்டணங்கள் 2019 ஆம் ஆண்டின் பின்னரும் 17 கற்கைநெறிகளின் கட்டணங்கள் 2017 ஆம் ஆண்டின் பின்னரும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சேவை நாடுனரின் வேண்டுகோள், ஏனைய போட்டி நிறுவனங்களின் விலை, கற்கை நெறிகளுக்குள் உள்ளடக்கப்படுகின்ற பாடவிதானங்கள் என்பவற்றின் அடிப்படையில் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கற்கைநெறிக் கட்டணங்கள் 4% இலிருந்து 30% இற்கு இடைப்பட்ட வீச்சில் அதிகரிக்கபப்பட்டது. அவ்வாறே ஆய்வுகூட பரிசோதனைக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றிக்கை பணிப்புரைகளுக்கு இணங்கியிருக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்ய முடியாது போனால் திறைசேரிக்கு அனுப்பி அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கைக்குச் சமாந்திரமாக வழங்கப்பட்ட நல்லாட்சி தொடர்பான செயற்பாட்டுக் | ஊழியர்களுக்குச் செலுத்தப்படுகின்ற அனைத்து படிகளும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினையும் வரிசை அமைச்சின் சிபாரிசினையும் பெற்றுக்கொண்டதன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற அனைத்து படிகளுக்குமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கையேட்டின் 3.2 (i) ஆம் பந்தி | மாத்திரம் பெற்று ஆய்வுகூட பரிசோதனை படிகள், கற்கைநெறி சம்பந்தமான படிகள், வார இறுதி கற்கை நெறிக்கான பதவியணியினர் படிகள், ஆலோசகர் படிகள், என்பவற்றிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12,730,369 செலுத்தப்பட்டது. | | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தியினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான சொத்துக்கள், பட்டியல் பொருட்கள், இருப்பு பதிவேட்டுப் பொருட்கள் என்பன தொடர்பாக வருடாந்த மீளாய்வு செய்யப்பட்டு அறிக்கையினை 2023 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2023 மே 15 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த மீளாய்வு அறிக்கையினை பூரணப்படுத்தி இயக்குனர் சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | மீளாய்வு நடவடிக்கை உரிய வேளைக்குச் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 06 மற்றும் 10 ஆம் பந்திகள் | ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் தமது நிறுவனத்தின் கீழுள்ள அனைத்து நிதியற்ற சொத்துக்கள் தொடர்பாகவும் சரியான தகவல்களை கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 471,325,349 தொகையான உட்கட்டமைப்பு வசதிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான தகவல்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில் | கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு 2022 ஆம் ஆண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள், காணியும் கட்டிடங்களும் என்பன தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டன. | அனைத்து நிதியற்ற சொத்துக்களும் தொடர்பாக சரியான தகவல்களை கணக்கு கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ல. | | |
| (உ) | 2022 சனவரி 25 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க மற்றும் 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்து சுற்றறிக்கையின் 02 (ஆ) பந்தி | திருத்தம் செய்வது வினைத்திறனானதான வாகனங்களை திருத்தம் செய்து துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்ட நிறுவனத்தின் 03 வாகனங்களை திருத்தம் செய்வதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி மனுக்களைப் பெற்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கும் பொறியியலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் 02 மாதங்களுக்குள் இந்த 03 வாகனங்களையும் திருத்தம் செய்து பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | திருத்தம் செய்தல் வினைத்திறனானதான வாகனங்களை திருத்தம் செய்தல் துரிதமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 (ஆ) வழிகாட்டி மற்றும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் 52.1 ஆம் பிரிவு | மேம்படுத்துதல், மாற்றம் செய்தல் மேற்கொண்டு வகுப்பறைகளின் தரத்தினை உயர்த்தும் (Improvement Modification & Upgrading of Class rooms) ஒப்பந்தத்தின் செயலாற்றல் பிணையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் முடிவடைந்து 28 நாட்கள் வரையும் செல்லுபடியாக வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஒப்பந்த காலத்தை நீடிக்கும் போது வங்கி செயலாற்றல் பிணையை வழங்குதல் மறுக்கப்பட்டிருந்ததனால் காணப்பட்ட பிணையின் பெறுமதிக்குச் சமமான ரூபா 2,736,962 தொகை பணமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | செயலாற்றல் பிணையின் பெறுமதியை நீடிப்புச் செய்வதற்கு அந்த நிறுவனமும் வங்கியும் மறுத்ததனால் அதன் பெறுமதியான ரூபா 2,736,962 பணத்தை பணமாகப் பெற்று ஒப்பந்தம் முடியும் வரை வைப்புச் செய்யப்பட்டது. விலை முரணை செம்மையாக்கியதன் பின்னர் செயலாற்றல் பிணையின் பெறுமதி திருத்தப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் படியும் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| நிறுவனத்தின் நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட காசு மீதிக்கான வட்டியினை செம்மையாக்காததனால் ரூபா ஒரு மில்லியன் வைக்கப்பட்டு மிகுதிப் பணத்தை அந்த வங்கியிலேயே பேணப்படுகின்ற நிதியத்தின் முகாமைத்துவ கணக்கிற்கு மாற்றுதல் 2022 சனவரி மாதம் 11 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க அந்த நிதிய முகாமைத்துவ கணக்கில் ஒவ்வொரு மாதத்திலும் காணப்பட்ட காசு மீதியின் சராசரி ரூபா 5 மில்லியனுக்கும் ரூபா 10 மில்லியனுக்கும் இடையேயான 6 சந்தர்ப்பங்களும் ரூபா 10 மில்லியனுக்கும் ரூபா 25 மில்லியனுக்கும் இடையேயான 6 சந்தர்ப்பங்களும் ஆக இருந்ததுடன் அக்கணக்கில் பணத்தை வைத்திருப்பதற்காக மீளாய்வாண்டிற்கான வட்டியாக ரூபா 711,762 கிடைத்திருந்தது. எனினும் அப்பணம் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயிருந்தால் மிகவும் வினைத்திறனாக பயன்படுத்தியிருக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | நிதிய முகாமைத்துவக் கணக்கை மீண்டும் மீளாய்வு செய்து அது தொடர்பாக ஒரு விபரமான அறிக்கையை இயக்குனர் சபைக்குச் சமர்ப்பித்து இக்கணக்கை பேணுவது சம்பந்தமாக துரிதமாக தீர்மானம் எடுக்கப்படும். | பணத்தை மிகவும் வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 65,891,654 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 37,439,379 ஆகும். நிதி விளைவுகளில் ரூபா 28,452,275 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு முதலீட்டு வட்டி அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| நிறுவனத்தினால் பேணப்படுகின்ற 65 டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பத்திர கற்கை நெறிகள் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 05 சான்றிதழ் பத்திர கற்கைநெறிகளுக்காக தேசிய தொழில்சார் தகமைகளை (NVQ) ஆண்டுகளின் போது பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் 10 கற்கை நெறிகளுக்கு NVQ தகமையைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்திருந்தும் வெளிப்படுத்துவதற்கு ஆயத்தமில்லை எனத் தெரிவித்து வழங்கப்படவில்லை. | TVEC இன் NCS களில் பல ஆபரணங்கள் மற்றும் ஆடைத்துறையில் மிகவும் கீழ் மட்டத்திலுள்ள தொழில் வாய்ப்புக்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளன. SLITA மூலம் பேணப்படுகின்ற கற்கைநெறிகள் நாளதுவரையாக்கப்பட்டுள்ளதனால் TVEC இன் ஏற்றுக்கொள்ளல்களுக்கு கற்கை நெறிகளை பொருந்தச் செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவு காலப்பகுதி தேவைப்படும். | கற்கை நெறிகளின் தரத்தினையும் அதிகளவான வரவேற்புக்களையும் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |

### 3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடவைகள் மற்றும் ஆபரணங்கள் நிறுவன அதிகாரச் சட்டத்தின் 04 (அ) பிரிவின் மூலம் நிறுவனத்தை உருவாக்கும் குறிக்கோளாக பட்டப்பின் படிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் குறிப்பிடப்பட்டிருந்தும் அதிகாரச் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் அதிகாரம், செயற்பாடுகள் மற்றும் கடமைகளில் அக்குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு பட்டப்பின் படிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு மாத்திரம் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தும் நிறுவனம் சுதந்திரமாக பட்டங்களை வழங்கும் | இலங்கை புடவைகள் மற்றும் ஆபரணங்கள் நிறுவனத்தின் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை உருவாக்கி பேண முடியும் எனவும் அவ்வாறு அதிகாரச்சட்டத்திலுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பட்டப்படிப்பு கற்கைநெறிகளை பேணலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அதிகாரச் சட்டத்தின் 05 ஆம் பிரிவு) பட்டத்தினை வழங்குவதற்கு முன்னர் ஏனைய விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதனால் | நிறுவனத்தை உருவாக்கும் குறிக்கோளும், அதிகாரங்களும் செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலைமைக்கு மாறுவதற்காக ரூபா 762,115 மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது. | தற்பொழுது அந்த நடவடிக்கை உயர் கல்வி அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பட்டத்தினை வழங்குவதற்கு முடியுமான ஒரு நிறுவனமாக மாற்றுவதே நிறுவனத்தின் குறிக்கோளாகும். | |

**3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிறுவனத்தினால் Banana Yarn செயற்திட்டத்தின் கீழ் வாழை நாரினைப் பயன்படுத்தி நூல் உற்பத்தி செய்வதனை குறிக்கோளாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 11,962,335 தொகைக்கு HTHPS Dyeing இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்த்தவாறு அந்த நடவடிக்கை வெற்றியளிக்காததனால் அந்த இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது காணப்பட்டதுடன் அதனை செயற்படுத்துவதற்கு பயிற்சிபெற்ற செயற்பாட்டாளரும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் இல்லை. | சொத்துக்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும். |

**4. கணக்களித்தன்மையும் நல்லாட்சியும்**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கையானது 2023 மே 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை மாத்திரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. | நிதி ஆண்டு முடிவடைந் 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணைவாக வழங்கப்பட்ட நல்லாட்சி தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.3 ஆம் பிரிவின் கீழான பின்னிணைப்பு 01 இன் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | வருமானங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. | குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான காலப்பகுதியினைக் காட்டி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |